1972 ஏப்ரல் 3]

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

Clause 7 was put and carried.

Clauses 8 to 12 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move :

"That the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Bill, 1972 (L.A. Bill No. 6 of 1972), as amended, be passed."

The motion was put and carried, and the Bill, as amended, was passed into law.

(6) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் 'அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பில், (8) மற்றும் (3) எண்கள் உள்ள சட்டமுன் வடிவுகளை, 7-ம் எண் உள்ள சட்டமுன்வடிவுக்கு முன்னதாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஓ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரித் தண்டல் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு 12/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரித் தண்டல் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு என் 12/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1864-ம் ஆண்டு வரித்தண்டல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1864) 52-வது பிரிவின் கீழ் நிலவரி நீங்கலான ஏனைய வரி பாக்கிகளும், மாநில அரசுக்குச் சேர வேண்டிய மற்றெல்லாத் தொகைகளும், நிலவரி பாக்கியைப் போலவே வசூலிக்கப்படலாம். சென்னையில் உள்ள தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் போன்ற ஓரளவு அரசுப் பங்கு பெற்ற நிறுவனங்களுக்கு சேரவேண்டிய தொகைகளுக்கும், போருக்கு பிந்திய பணிகள்--மறுவாழ்வு நிதி, முன்னாள் படையினர் மறுவாழ்வு சிறப்பு நிதி ஆகியவற்றில் தமிழ்நாட்டிற்குள்ள ஒருங்கிணைந்த பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட கடன்களையும் முன் பணங்களையும், வசூலிப்பதற்கும் இந்த விதி பொருந்தாது. சென்னையில் உள்ள தமிழ்நாடு வேளாண்--தொழில் கழகம் அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படக் கூடிய அத்தகைய பிற கழகங்கள் எவருக்கேனும் கொடுத்த அல்லது போருக்கு பிந்திய பணிகள்—மறுவாழ்வு நிதி, முன்னாள் படையினர் மறுவாழ்வு சிறப்பு நிதி ஆகியவற்றில் தமிழ் நாட்டிற்குள்ள ஒருங்கிணைந்த பங்கிலிருந்து எவருக்கேனும் கொடுக்கப்பட்ட கடன்களையும் முன் பணங்களையும் வசூலிப்பதற்கு திறனுள்ள வழிமுறை ஏதுமில்லை.

எனவே மேற்கூறிய தொகைகளை நிலவரி பாக்கியைப் போலவே வசூலிப்பதை உறுதிப்படுத்துவதற்காக தமிழ்நாடு 1864-ம் ஆண்டு வரித்தண்டல் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம்

* 29—3—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.